Vol II

TDRC 1128 1128

RR 159.4

தெ.க்.மையம் சென்னை

0111,2JSH1g
120140

TALES FROM SHAKESPEARE

# THE COMEDY OF ERRORS

ஷேக்ஸ்பியர் நாடகக் கற்பித கதைகள்

## நகைவிளை நாடகம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
MADRAS, COLOMBO AND LONDON
1908

120140

# THE COMEDY OF ERRORS

## நகைபிழை நாடகம்

ஐரோப்பா கண்டத்தில் சைரக்கூஸ், எபிஸஸ் என்று இரண்டு இராச்சியங்களிருந்தன. அவற்றிற்குட் சச்சரவுண்டாயிற்று. அதனால் சைரக்கூஸ் வர்த்தகர்களில் எவனாவது ஒருவன் எபிஸஸ் நகரத்தில் தலைகாட்டுவானாகில் தன் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள ஆயிரம் "மார்க்" என்னும் நாணயத்தைக் கொடுத்தாலன்றி அவன் உயிரை வதைத்துவிடுகிறதென்று எபிஸஸ் நகரத்தில் ஒரு கொடிய சட்டம் ஏற்பட்டிருந்தது.

சைரக்கூஸ் நகரவாசியாகிய ஈஜியன் என்னும் ஓர் வயது சென்ற வர்த்தகன் எபிஸஸ் நகரத்தின் தெருக்களில் கண்டுபிடிக்கப்பட்டான். உடனே அவனை அந்நகரத்தின் அதிபதிக்குமுன் கொண்டுபோய் "உன் அபராதத்தைக் கட்டு, அல்லது மரணதண்டனை பெற்றுக்கொள்" என்றார்கள்.

அபராதத்தைக் கட்ட ஈஜியன் கையில் பணமில்லை; ஆகையால் மரணதண்டனை விதிப்பதற்குமுன் அதிகாரி அவனைப் பார்த்து "அப்பா, உன் விருத்தாந்தத்தைச் சொல். எபிஸஸ் நகரத்திற்குள் வருவது சைரக்கூஸ் வர்த்தகர்களுக்குத் தலைபோகும்படியான காரியமென்பதைத் தெரிந்தும் நீயேன் இங்கு வரத்துணிந்தாய்" என்றான்.

…தற்கு ஈஜியன் "சுவாமீ, எனக்கு மரணத்தைக் குறித்துப் பயமில்லை. மகத்தான விசனத்தினால், என் உயிர் இன்னும் போகவில்லையே என்றிருந்தேன். என் வாழ்நாட்களில் நான் பட்ட கஷ்டங்களையெல்லாம் இப்பொழுது சொல்வதைக் காட்டிலும் சங்கடமான காரியம் வேறொன்றுமில்லை; ஆயினும் சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று பின்வருமாறு கூறினான்.

"நான் பிறந்தது சைரக்கூஸ் நகரம். பாலியத்தில் வர்த்தகத்தொழிலில் பயிற்சியடைந்தேன். பின்பு ஓர் ஸ்மாட்டியை விவாகம் செய்துகொண்டு அவளுடன் சுகமாய் வாழ்ந்திருந்தேன். எபிதாமினியம் என்னும் இடத்திற்கு அவசியம் போகும்படி நேரிட்டதினால் அவ்விடத்தில் என் வேலையின் பொருட்டு ஆறுமாதகம் நிறுத்தப்பட்டேன். அப்புறம் இன்னும் கொஞ்சக்காலம் நீடித்திருக்கும்படி நேரிட்டதினால் என் மனைவியை வரவழைத்துக் கொண்டேன். அவள் அங்குவந்து சேர்ந்தவுடனே இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள். அதில் ஆச்சரியமென்னவெனில், அவ்விரண்டு குழந்தைகளும் ஒன்றுக்கொன்று சற்றேனும் வித்தியாசமின்றி முற்றும் ஒத்திருந்தன. என் மனைவி இவ்விரண்டு பிள்ளைகளையும் பிரசவித்த சமயத்திலேயே நாங்கள் குடியிருந்த சத்திரத்தில் வாசஞ்செய்த ஓர் எளிய ஸ்திரீயானவள் இரண்டு மக்களைப் பெற்றாள். என் பிள்ளைகள் எப்படி பரஸ்பரம் ஒத்திருந்தனரோ அப்படியே அவ்விரண்டு பிள்ளைகளும் ஒரே உருவுள்ளவர்களாயிருந்தனர். அக்குழந்தைகளின் தாய்தந்தையர் வெகு தரித்திராகையால் அவ்விரண்டு பிள்ளைகளையும் நான் விலைக்கு வாங்கி என் மக்களுக்கு வேலைசெய்யும்பொருட்டு வளர்த்து வந்தேன்.

என் பிள்ளைகள் வெகு நல்ல குழந்தைகள். அக்குழந்தைகளைப் பார்த்துப் பார்த்து என் மனைவி வெகு சந்தோஷப்பட்டாள். ஊருக்குத் திரும்பிப் போகவேண்டுமென்று அவள் நாள்தோறும் கோரிக்கொண்டிருந்ததினால், எனக்குச் சம்மதியில்லாமலிருந்தும் அப்படியே போக உடன்பட்டேன். நாங்கள் கப்பலேறின முகூர்த்தம் எப்படிப்பட்டதோ தெரியாது; எபிதாமினியம் நகரத்திலிருந்து சுமார் மூன்றுமைல் தூரம்



போவதற்குமுன் ஒரு பயங்கரமான காற்றும் மழையும் ஆரம்பித்தது. அவை வரவர வெகு உக்கிரமாய் அடிக்கத் தலைப்பட்டமையால் கப்பற்காரர்கள் கப்பலைக் காப்பாற்றுவது அசாத்தியமென்று அறிந்து தங்கள் பிராணனை இரட்சித்துக் கொள்ள ஓர் படகில் கும்பலாய்க் குதித்தனர். எங்களை மாத்திரம் கப்பலிலேயே விட்டனர். அந்தக் கப்பல் காற்று மழையின் உக்கிரத்தினால் நாசமடையுமென்று பிரதிநிமிஷமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

என் மனைவியோ ஓயாமல் புலம்பிக்கொண்டிருந்தாள். என் அழகிய பாலகர்களோ வெகு பரிதாபமாய் அழுதுகொண்டிருந்தனர். அவர்களுக்குப் பயமென்பது தெரியாமல் போனபோதிலும் தங்கள் தாயார் அழுதுகொண்டிருந்ததினால் தாங்களும் சும்மா அழுதனர். நான் இறந்துபோவேன் என்னும் விஷயத்தில் எனக்கு பயமில்லாமல் போனபோதிலும் அவர்களைப் பார்க்கையில் வெகு திகிலுண்டாயிற்று. அவர்களை எப்படியாவது காப்பாற்ற ஒரு உபாயம் தேடவேண்டுமென்று என் புத்தியையெல்லாம் செலுத்தினேன். காற்றுமழையில் உபயோகப்படுமென்று சிறு பாய்மரத்துண்டுகளைக் கப்பற்காரர்கள் கப்பலில் போட்டுவைக்கிறதுண்டு. அப்படிப்பட்ட மரத்துண்டொன்று அக்கப்பலில் அகப்பட்டது. அதில் ஓர் நுனியில் என் இரண்டாவது மகனைக் கட்டினேன். மற்றொரு நுனியில், நான் வளர்த்துவந்த வேலைக்காரர்களில் இரண்டாவது பயலைக் கட்டினேன். வேறொரு பாய்மரத்துண்டை என் மனைவி கையில் கொடுத்து அதின் நுனிகளில் அப்படியே மற்றொரு மகனையும், வேலைக்காரப்பயலையும் கட்டும்படி சொன்னேன். இவ்வாறு அந்தப் பாய்மரத்துண்டோடு தன்னையும் கட்டிக்கொண்டு அவ்விரண்டு குழந்தைகளுடன் அவள் போனாள். அப்படியே மற்றொரு துண்டில் கட்டப்பட்டிருந்த குழந்தைகளுடன் என்னையும் கட்டிக்கொண்டு நான் போனேன். இப்படிச் செய்யாமலிருந்தால் நாங்களெல்லோரும் மூழ்கிப்போயிருப்போம். ஏனென்றால் அக்கப்பல் ஓர் பெருத்த பாறையின்மீது மோதி, துண்டுதுண்டாய்ப் பிளந்துபோய்விட்டது. நாங்கள் அச்சிறு பாய்மரங்களின் ஆதாரத்தால் ஜலத்தின்மீது

பிரிந்து கொண்டிருந்தோம். நான் இரண்டு குழந்தைகளைக் காத்துக் கொண்டிருந்ததனால் என் மனைவிக்குச் சகாயஞ்செய்யக் கூடாதவனாயிருந்தேன். அவள் சற்றுநேரத்துக்கெல்லாம் மற்றக் குழந்தைகளுடன் என்னைவிட்டு அலைகளினால் பிரிக்கப்பட்டாள். வெகு தூரத்தில் என் மனைவியும் இரண்டு குழந்தைகளும் என் கண்ணுக்குத் தென்பட்டுக்கொண்டிருக்கையிலேயே சில செம்படவர் அவர்களைப்பார்த்துத் தங்கள் படகில் ஏற்றிக்கொண்டனர். அவர்கள் காரிந்து நகரத்தாரென்று என் புத்திக்குப்பட்டது. எப்படியாவது அவர்கள் க்ஷேமமாய்ப் படகில் ஏற்றப்பட்டதினால் அவர்களைப்பற்றிய கவலை நீங்கி என் பிரியமுள்ள மற்றொரு மகனையும் இரண்டாவது வேலைக்காரப்பயலையும் காப்பாற்றவேண்டுமென்று தாறுமாறாய்ப் புரண்டுவரும் கடல் அலைகளோடு மல்லுகொடுத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அந்த வழியாய் ஓர் கப்பல் வந்தது. அதில் நாங்களும் ஏற்றிக்கொள்ளப்பட்டோம். அக்கப்பற்காரர்கள் அறிந்தவர்களாகையால் எங்களை வெகு அன்போடு எதிர்கொண்டு வேண்டிய சகாயம்செய்து க்ஷேமமாய் சைரக்கூஸ் நகரத்தில் இறக்கிவிட்டார்கள். இப்படி எங்களுக்குக் கஷ்டம் நேரிட்ட அக்காலம்முதல் இதுவரையில் என் மனைவியும் மூத்த பிள்ளையும் என்ன கதியானார்களோ எனக்குத் தெரியாது.

இப்பொழுது எனக்கு ஒரே பிள்ளையாயிருக்கும் என் இரண்டாவது மகன் பதினெட்டாவது வயதில் தன் தாயாரும் சகோதரனும் என்னவிதமாய்ப் போனார்களோ அதைத் தெரிந்துகொள்ள வெகு ஆவலுள்ளவனாய், "அண்ணா, தன் சகோதரனை இழந்திருக்கும் என் சிறிய வேலைக்காரப் பையனை இட்டுக்கொண்டு அவர்களை நான் தேடப் போக வேண்டும்; [illegible] கொடுங்கள்" என்று அடிக்கடி வருந்திக் கேட்டான். என் மனைவியையும், மூத்த மகனையும்பற்றிய சங்கதிகளைக் கேட்க நான் வெகு ஆவலுள்ளவனாயிருந்தும், அவர்களைத் தேடும்பொருட்டு என் இளைய மகனை அனுப்பினால் அவனையும் ஒருவேளை காணாமல் போய்விடலாமென்னும் அச்சம் என் மனதிலிருந்தது. ஆகையால் மனப்பூர்வமாய் ஒத்துக்கொள்ளாமலே போய்வாவென்றேன். அவன்



என்னைவிட்டுப் போய் ஏழுவருஷமாகிறது. ஐந்து வருஷகாலமாய் அவனைத் தேடிக்கொண்டு உலகமெல்லாம் திரிந்தேன். வெகு தூரத்திலிருக்கும் கிரீஸ் தேசத்திற் போய்ப்பார்த்தேன். ஆசியாக்கண்டத்தின் எல்லையின் வழியாய் வந்து கப்பலேறி வீட்டுக்குத் திரும்பி, மனிதர் வாசமாயிருக்கும் ஓர் இடத்தையும் பாராமல் விடக்கூடாதென்னும் எண்ணத்தினால், இந்த எபிஸஸ் நகரத்தி லிறங்கினேன்; இந்த [illegible] என் கதை முடிந்துபோகிறது. என்னுடைய மனைவியும், பிள்ளைகளும் சுகமாயிருக்கிறார்களென்னும் செய்தியைமாத்திரம் கேட்பேனாகில் வெகு சந்தோஷமாய்ப் பிராணனை விடுவேன்" என்றான்.

இவ்வாறு மிகவும் மனம் நொந்திருந்த ஈஜியன் தன் துக்கங்களைச் சொல்லி முடித்தான். அந்நகரத்தி னதிபதி இதைக் கேட்டு "ஐயோ பாவம், இத்தந்தை, காணாமற்போன தன் மகனிடத்திலுள்ள பிரீதியினாலல்லவோ இப்பெருத்த அபாயத்திற்குத் தானே உட்பட்டான். நாமோ இந்த நாட்டின் சட்டங்களின்படி நீதிவழுவாமல் அரசு செலுத்துவதாகப் பிரதிக்கினை செய்திருக்கிறோம். அவற்றை மாற்றுவது நம்முடைய பிரதிக்கினைக்கும் கண்ணியத்துக்கும் குறைவாயிருக்கும். அப்படியில்லாமற் போகுமாகில் இவனைத் தாராளமாய் மன்னிப்போம். ஆயினும் சட்டத்திற் சொல்லியிருக்கிறபடி இந்த க்ஷணமே இவனுக்கு மரணதண்டனை விதிக்காமல் இந்த நாள்முழுதும் விடைகொடுப்போம். இதற்குள் கடன்பட்டோ அல்லது பிச்சையெடுத்தோ அப்பணத்தைக் கட்டினால் கட்டிவிடட்டும்" என்று சொன்னான்.

இவ்வாறு கருணைகூர்ந்து அந்நாள்முழுதும் விடைகொடுத்தது ஈஜியனுக்குப் பெருத்த சகாயமாகத் தோன்றவில்லை. அவன் எபிஸஸ் நகரத்தில் யாரையும் அறியான். அங்கிருப்பவர்களில் யாராவது ஆயிரம் மார்க்குகளைக் கடனாகவோ தயாவிஷயமாகவோ கொடுப்பார்களென்பதற்குச் சற்றும் இடமில்லாமலிருந்தது. தனக்குச் சகாயம் கிடைக்குமென்னும் விஷயத்தில் சற்றேனும் நம்பிக்கையில்லாமல் நிராதாரவாய் ஓர் சிறைச்சேவகனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டு அதிகாரியின் முன்னிலையில் இருந்து விட்டான்.

எபிஸஸ் நகரத்தில் தனக்குத் தெரிந்தவர்கள் ஒருவருமில்லை என்று ஈஜீயன் எண்ணியிருந்தான். தன் இரண்டாவது மகனை வெகு ஜாக்கிரதையாய்த் தேடிக் கொண்டுவந்து தன் உயிரையே இழக்கும்படி நேரிட்டிருந்த அக்காலத்தில் அம்மகனும், அத்தமையனும் ஆகிய இருவரும் அந்த எபிஸஸ் நகரத்திலிருந்தனர்.

ஈஜீயனுடைய பிள்ளைகள் முகத்திலும், உருவத்திலும் ஒரேவிதமாய் இருந்ததோடு இருவரும் ஆந்திபோலிஸ் என்னும் ஒரே பெயரை உடையவர்களாயிருந்தனர். அவர்கள் வேலைக்காரர்களாகிய இரட்டைப்பிள்ளைகளும் துரோமியோ என்னும் ஒரே பெயரை உடையவர்களாயிருந்தனர். ஈஜீயன் எபிஸஸ் நகரத்தில் தேடிக்கொண்டுவந்த சைரக்கூஸ் நகரத்தின் ஆந்திபோலிஸ் என்பவன் தன் தகப்பன் வந்து சேர்ந்த தினத்திலேயே துரோமியோ என்னும் தன் வேலைக்காரனோடு எபிஸஸ் நகரத்தில் வந்து சேர்ந்தான். அவனும் சைரக்கூஸ் நகரத்தின் வர்த்தகனாகையால் தன் தகப்பனுக்கு நேர்ந்த அபாயத்தைத் தானும் அடைந்திருப்பான். தெய்வாதீனமாய் அவனை ஒரு சிநேகிதன் பார்த்து, "அடடா! சைரக்கூஸ் நகரத்திலிருந்து வந்த வயதுசென்ற வர்த்தகனொருவன் இன்று பட்டபாட்டை நீ அறியாயா? யாராவது கேட்டால் நான் எபிதாம்னியம் நகரத்து வர்த்தகனென்று சொல்" என்றான். அப்படியே செய்வதாக ஆந்திபோலிஸ் ஒத்துக்கொண்டான். தன் ஊரிலிருந்துவந்த ஒருவன் ஆபத்திலிருந்ததைக் கேட்டு வெகு விசனப்பட்டான். அந்த வயதுசென்ற வர்த்தகன் தன் சொந்தத் தகப்பன் என்பது அவனுக்குத் தெரியாது.

ஈஜீயனுடைய சிறிய மகன் சைரக்கூஸ் நகரத்தின் ஆந்திபோலிஸ் அல்லவா?—ஈஜீயனுடைய பெரிய மகனை எபிஸஸ் நகரத்தின் ஆந்திபோலிஸ் என்னலாம். அவன் எபிஸஸ் நாட்டில் இருபதுவருஷம் வாசமாயிருந்தான். மேலும் தனிகனாகையால் தன் தகப்பனுடைய பிராணத்தைக் காப்பாற்றும்பொருட்டுச் செலுத்தவேண்டிய பணத்தைக் கொடுப்பது அவனுக்கு ஒரு பெரிதல்ல. ஆயினும் தன் தகப்பனைப்பற்றி அவனுக்கு ஒன்றுந் தெரியாது. அவன் தாயோடு அவனைக் கடலிலிருந்து செம்படவர் கரையேற்றினகாலத்தில் அவன் பச்சைக் குழந்தை. ஆகையால் அப்படி அவர்கள் தன்னைக் காப்பாற்றினதுமாத்திரம் அவனுக்கு ஞாபகத்திலிருந்தது. தாய் தந்தையைப்பற்றி அவனுக்கு யாதொன்றும் ஞாபகமில்லை. இந்த ஆந்திபோலிஸ், அவனுடைய தாய், சிறு வேலைக்காரப் பயலாகிய துரோமியோ இவர்களைக் கரையேற்றிய செம்படவர், ஆபத்தில் மூழ்கியிருந்த அந்த அம்மாளுக்கு வெகு விசனமுண்டாகும்படி அவ்விரண்டு குழந்தைகளையும் விற்கும்பொருட்டு அவளிடத்திலிருந்து கொண்டு போய்விட்டார்கள்.



அவர்கள் அவ்விருவரையும் மினபன் என்னும் பிரபுவுக்கு விற்பனை செய்தார்கள். அப்பிரபு கீர்த்திபெற்ற போர்வீரன். எபிஸஸ் நாட்டு அரசனுக்குச் சிற்றப்பன். தன் சகோதரன் புத்திரனாகிய அவ்வரசனை அவன் பார்க்கப் போனபோது அவ்விரண்டு பிள்ளைகளையும் எபிஸஸ் நகரத்திற்குக் கொண்டு போனான். எபிஸஸ் அரசனுக்கு, குழந்தையாகிய ஆந்திபோலிஸ் இடத்தில் அன்புண்டாயிற்று. வயது வந்தபோது அவனுக்குத் தன் சேனையில் ஓர் தலைமை உத்தியோகத்தைக் கொடுத்தான். அவன் அவ்வதிகாரத்தை யடைந்தபின் பல யுத்தங்களில் வெகு பராக்கிரமசாலியென்று பேர் பெற்றுத் தன்னை முன்னுக்குக் கொண்டுவந்த அரசனுடைய பிராணனையும் ஓர் சமயத்தில் இரட்சித்தான். அவ்வரசன் இதற்கு வெகுமதியாய் எபிஸஸ் நகரத்திலுள்ள அதிரியானா என்னும் ஓர் செல்வியை அவனுக்கு விவாகஞ் செய்துகொடுத்தான். தன் தந்தை அந்நகரத்தில் வந்த தினத்தில் அவன் ஆச்சிமாட்டியுடன் சுகமாயிருந்தான். அவன் வேலைக்காரனாகிய துரோமியோ என்பவனும் அவனுக்கு ஊழியஞ் செய்துகொண்டிருந்தான்.

தான் எபிதாம்னியம் என்னும் இடத்திலிருந்து வந்தவனென்று சொல்லும்படி தனக்கு புத்தி சொல்லிக்கொடுத்த சிநேகிதனைப் பிரிந்தபின், சைரக்கூஸ் நாட்டு ஆந்திபோலிஸ் சாப்பாட்டுக்குப் போக நினைத்திருந்த ஓர் சத்திரத்தில் கொடுத்துவரும்படி சொற்ப பணத்தைத் துரோமியோவென்னும் தன் வேலைக்காரனிடத்தில் அனுப்பினான். அவன் திரும்பி வருவதற்குள் அப்பட்டணத்தைச் சுற்றிப்பார்த்து

அதிலுள்ள ஜனங்களின் உடைநடை பாவனைகளைத் தெரிந்து கொள்ளலாமென்று சிறிது தூரம் சென்றான்.

அந்தத் துரோமியோ வெகு வேடிக்கைக்காரன். ஆந்திபோலிஸ் ஒன்றுந் தோன்றாமல் விசனமாய் இருந்தால் அவ்வேலைக்காரனுடைய கோலக்கூத்துகளையும், பரிகாசங்களையும் பார்த்துச் சந்தோஷமடைவான். ஆகையால் சாதாரணமாய் எஜமானிடம் அடிமைவார்த்தை சொல்வதைப்போலல்லாமல் பரிகாசத்துடன் தாராளமாய் வார்த்தை சொல்லும்படி துரோமியோவுக்கு இடங்கொடுத்திருந்தான்.

துரோமியோவைச் சத்திரத்திற்கு அனுப்பினவுடனே தாய், தம்பி இவர்களைத் தேடிக்கொண்டு தான் தனியாய் அலைவதையும், போன தேசங்களிலெங்கும் அவர்களைப்பற்றி யாதொரு சங்கதியுந் தெரியாமற்போனதையும்பற்றி எண்ணமிட்டுக்கொண்டே சற்று நின்றான். அப்புறம் விசனமாய் "கடல் நடுவில் முன் தன்னுடன் இருந்த ஒரு துளியைத் தேடிக்கொண்டுபோய்க் காணாமல் அம்மகா சமுத்திரத்திலேயே ஐக்கியமாய்ப் போகும் வேறொரு துளியைப்போலிருக்கிறேன். அப்படியே, என் கெட்ட காலத்தினால் என் அருமைத் தாயையும் சகோதரனையும் தேடிக்கொண்டுபோய் நானே அழியும்படி நேரிட்டது" என்று சொல்லிக்கொண்டான்.

இப்படித் திரிந்து பல தேசங்களில் பிரயோஜனமில்லாமல் யாத்திரை செய்து அலைந்ததையெல்லாம் நினைத்துக்கொண்டிருக்கையில் துரோமியோ திரும்பி வந்ததாக நினைத்தான். அவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி வந்ததைப்பற்றி ஆச்சரியப்பட்டு "அடா பணத்தை எங்கே கொடுத்துவந்தாய்" என்றான். அவன் தன் வேலைக்காரனான துரோமியோ அல்ல. எபிஸஸ் நகரத்திலிருந்த ஆந்திபோலிஸ் உடைய அடிமை. அவனும் இவனுடைய துரோமியோவும் இரட்டைப் பிள்ளைகளென்று முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா? ஏஜியன் சொன்னபடி குழந்தைகளாயிருந்தபோது அவ்விரண்டு ஆந்திபோலிஸ்களும் துரோமியோக்களும் உருவத்தில் எவ்வளவு ஒத்திருந்தார்களோ அப்படியே இப்போதும் இருந்தார்கள். ஆகையால் ஆந்திபோலிஸ் மற்றொரு துரோமியோவைப் பார்த்து



தன் வேலைக்காரன்தான் வந்துவிட்டானென்று நினைத்து ஆச்சரியப்பட்டு அப்படி கேட்டது வியப்போ? அந்தத் துரோமியோ இந்த ஆந்திபோலிஸை தன் எஜமானாக நினைத்துக்கொண்டு "ஸ்வாமீ! அம்மாள் உங்களைப் போஜனத்துக்குச் சீக்கிரமாய் அழைத்துவரச் சொன்னாள். கோழிக்கறி தீய்ந்துபோகிறது. பன்றிக்கறி கோட்டும் இரும்பினின்றும் கழுவிப்போகிறது. தாங்கள் சடுதியில் வாராமற்போனால் உணவெல்லாம் ஆறிப்போம்" என்றான். அதற்கு ஆந்திபோலிஸ், "அடா பரிகாசஞ் செய்வதற்கு இதுதானா சமயம். பணத்தை எங்கே கொடுத்துவந்தாய்" என்றான். அந்தத் துரோமியோ ஆந்திபோலிஸை சாப்பாட்டுக்கு அழைத்துவரும்படி அனுப்பியதாக மறுபடியும் சொன்னதின்மீது, "அடா அந்த அம்மாள்" என்றான். துரோமியோ, "ஸ்வாமீ! அதென்ன அப்படிக் கேட்கிறீர்களே? எஜமானனுடைய மனைவியாகிய எங்கள் அம்மாள்தான்" என்றான். ஆந்திபோலிஸுக்கோ இன்னும் கலியாணமில்லை. ஆனபடியால் அந்த துரோமியோமீது வெகு கோபமாய், "அடா நான் வேலையில் உன்னுடன் இணங்கி வேடிக்கையாய் வார்த்தை சொல்லுவதினாலல்லவோ இப்போது நீ என்னுடன் பரிகாசம் செய்கிறாய்; உன்னுடன் வேடிக்கையாய்ப் பேச இப்பொழுது எனக்குச் சரிப்படாது. பணமெங்கே? இந்த ஊருக்கு நாம் புதியவர்களாயிருக்கையில் அவ்வளவு பெருத்த தொகையை அன்னியர்களிடத்தில் நீ எப்படி ஒப்புவித்து வரலாம்" என்றான்.

துரோமியோ, தன் எஜமான் என்று நினைத்த ஸைராகூஸ் ஆந்திபோலிஸ் அந்த ஊருக்குத் தாங்கள் புதிதென்று சொன்னதினால் பரிகாசம் செய்கிறானென்று நினைத்து வேடிக்கையாய், "ஐயா உங்களுக்குக் கும்பிடு போடுகிறேன்; உட்கார்ந்து சாப்பிடுகையில் பரிகாசஞ் செய்யலாம். எங்கள் அம்மாளோடும் அவர்கள் சகோதரியோடும் போஜனம் செய்யும்பொருட்டு உங்களை வீட்டுக்குக் கொண்டுவரும்படி மாத்திரம் எனக்கு உத்தரவாயிருக்கிறதேயன்றி வேறில்லை." இதைக் கேட்டமாத்திரத்தில் ஆந்திபோலிஸ் கோபம் அடக்க முடியாமல் துரோமியோவை அடித்தான். அவன் வீட்டுக்

கோடித் தன் எஜமானியைப் பார்த்து "அம்மா! ஐயா வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு வரமாட்டேன் என்றார். தனக்கு மனைவி யில்லையென்றும் சொன்னார்" என்றான்.

எத்ரியானா என்னும் அச்சீமாட்டி இதைக் கேட்டவுடனே வெகு கோபங்கொண்டாள். புருஷனிடத்தில் வெகு சந்தேக முள்ளவளாகையால் தன் கணவன் அவ்வாறு சொன்னதினால் தன்னிலும் மேலான வேறோர் பெண்ணினிடத்தில் பிரியங் கொண்டிருக்கவேண்டும் என்றாள். பலவாறு மனம் வருந்தினாள். தன் கணவனைப்பற்றித் தூஷணையாயும் பொறுமையாயும் பல அன்பற்ற வார்த்தைகளைச் சொன்னாள். அவளுடன் இருந்த லூஸியானா என்னும் அவள் சகோதரி, "அம்மா காரணமில்லாமல் நீ இப்படி சந்தேகப்படுகிறது சரியல்ல" என்று பலதரம் சொல்லியும் கேட்கவில்லை.

ஸைரக்கூஸ் ஆந்திபோலிஸ் சத்திரத்திற்குப் போனான். அவ்விடத்தில் துரோமியோ தான் கொடுத்தனுப்பிய பணத்தை வைத்துக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடனே அடா நீ அவ்வாறு தாரதம்மியமில்லாமல் என்னுடன் பரிகாசஞ் செய்யலாமாவென்று மறுபடியுங் கேட்க வாயெடுக்கையில், எத்ரியானா வந்தாள். அவனைத் தன் கணவனாகவே நினைத்துக்கொண்டு தன்னை முன்பின் அறியாததுபோல் பார்த்ததைப்பற்றி நிந்திக்கத் தொடங்கினாள். இச்சீமாட்டி எவ்வளவு கோபங்கொண்டாலும் அதுவரையிலும் அவளை அறியாதவனாகிய அவன் வேறெப்படிப் பார்க்கக்கூடும். அப்புறம் அவள் அவனைப் பார்த்து, "ஆ, நமக்கு விவாகமாவதற்குமுன் நீர் என்னிடத்தில் எவ்வளவு அன்பாயிருந்தீர்; இப்பொழுது என்னைவிட்டு வேறொருத்தியிடத்தில் மனதைச் செலுத்திவிட்டீரே; இதற்குக் காரணமென்ன? ஐயோ உம்முடைய அன்பை என்ன காரணத்தினால் இழந்தேன்" என்றாள். ஆந்திபோலிஸ் இதைக் கேட்டு வெகு ஆச்சரியப்பட்டு "அழகிய அம்மையே, இதையெல்லாம் என்னிடத்தில் ஏன் சொல்லுகிறாய். நான் உன் கணவனல்ல; நான் எபிஸஸ் நகரத்திலிருந்து வந்து இரண்டுமணிநேரந்தானாயிற்று" என்றான். என்ன சொன்னாலும் கேளாமல் தன் வீட்டுக்கு வரவேண்டுமென்று நிர்ப்பந்தத்தினால் தப்பித்துக்கொண்டு போக முடி-



யாமல் ஆந்திபோலிஸ் தன் சகோதரன் வீட்டுக்குப் போனான். எத்ரியானாவுடனும் அவள் சகோதரியுடனும் சாப்பிடுகையில் ஒருத்தி கணவனென்றும் மற்றொருத்தி மைத்துனனென்றும் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். இதை அவன் கேட்டுப் பிரமித்து, "ஆ! தூக்கத்தில் இப்பெண்ணுக்கும் நமக்கும் விவாகமாயிற்றோ, அல்லது இப்பொழுது நாம் தூங்கிக்கொண்டிருக்கிறோமோ" என்று நினைத்தான். அவர்களுடன் வந்த துரோமியோவும் அப்படியே ஆச்சரியப்பட்டான். ஏனென்றால் அவ்விட்டிலிருந்த அவன் சகோதரன் மனைவியாகிய சமையற்காரி அவனைத் தன் கணவனென்றாள்.

இவ்வாறு ஸைரக்கூஸ் ஆந்திபோலிஸ் தன் சகோதரன் மனைவியுடன் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், அவள் உண்மையான கணவனாகிய தன் சகோதரனும் அவன் வேலைக்காரனாகிய துரோமியோவும் வீட்டிற்குச் சாப்பாட்டுக்கு வந்தார்கள். தங்கள் எஜமானி, யார் வந்தாலும் கதவைத் திறக்கவேண்டாமென்று உத்தரவு செய்திருந்ததினால் வேலைக்காரர்கள் கதவைத் திறக்கமாட்டோம் என்றார்கள். அதைக் கேட்டு அவர்கள் ஆந்திபோலிஸும் துரோமியோவுமாகிய நாங்கள் வந்திருக்கிறோம் கதவைத் திறவுங்களென்று அவர்கள் ஓயாமல் இடிக்கையில் வேலைக்காரிகள் நகைத்து, "அப்படியா! எங்கள் அம்மாளுடன் ஆந்திபோலிஸ் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். துரோமியோ மடைப்பள்ளியில் இருக்கிறான்" என்றார்கள். அப்புறம் கதவை உடைத்துக் கொண்டு தள்ளிவிடும்படி அவர்கள் இடித்தும் உள்ளே விடவில்லை. இதைக்கண்டு ஆந்திபோலிஸ் வெகு கோபங்கொண்டு, "நம்முடைய மனைவியுடன் வேறோ ஒரு சிநேகிதன் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறதாகச் சொன்னார்களே, இது என்ன வேடிக்கையாயிருக்கிறது" என்று போய்விட்டான்.

ஸைரக்கூஸ் ஆந்திபோலிஸ், எத்ரியானா ஓயாமல் விடாதவளாய்த் தன்னைக் கணவனென்று கூப்பிடுவதையும் சமையற்காரி துரோமியோவைத் தன் நாயகனென்பதையுங் கேட்டு வெகு கலக்கமடைந்தான். ஆகையால் சாப்பிட்டவுடனே விட்டு விட்டால் போதுமென்று கூடிய சீக்கிரத்தில் ஏதோவொரு சாக்கைச் சொல்லி அவ்விட்டிலிருந்து போய்விட்டான்.

ஹாசியனிடத்தில் அவனுக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று, பொறுமைக்குணமுள்ள ஏத்ரியானிடத்தில் அதிக வெறுப்படைந்தான். அப்படியே துரோமியோவும் மடைப்பள்ளியில் தன் பெண்ஜாதியென்று சொல்லிக்கொண்டிருந்த சமையற்காரியின் அழகைப் பார்க்கையில் பிரியங்கொள்ளவில்லை. ஆகையால் எஜமானும் அடிமையும் தங்கள் புதிய பெண்ஜாதிமாரை விட்டுப்போனாற் போதுமென்று வெகு வேகமாய் ஓடிப்போனார்கள்.

சைரக்கூஸ் ஆந்திபோலிஸ் அந்த வீட்டைவிட்டுப் போனவுடனே அவனை ஓர் தட்டான் பார்த்து ஏத்ரியானுவைப் போலவே எபிஸஸ் ஆந்திபோலிஸ் என்று பிரமித்து, "ஐயா ஆந்திபோலிஸ்! நீர் செய்யச்சொன்ன தங்கச் சங்கிலி இதோ கொண்டுவந்தேன்" என்று கொடுத்தான். அதற்கு ஆந்திபோலிஸ் இந்த சங்கிலி என்னுடையதல்ல; இதை நான் வாங்கமாட்டேன் என்றான். தட்டான், "நீ சொல்லியபடியே செய்தேன்" என்று அதை ஆந்திபோலிஸ் கையில் வைத்துவிட்டுப் போனான். உடனே அந்த ஆந்திபோலிஸ் தன் வேலைக்காரனாகிய துரோமியோவை நோக்கி, "அடா யாதேனும் ஓர் கப்பலைப் பார்த்து நம்முடைய சாமான்களையெல்லாம் ஏற்றிவிடு. இனி ஒரு நொடியேனும் இங்கே இருக்கக்கூடாது; இந்த ஊரில் எந்தப்பக்கத்திற் போனாலும் விபரீதமாயிருக்கின்றது. என் சுயபுத்தி எனக்கு இருக்கிறதாக நான் நினைக்கவில்லை. மந்திரத்தினால் யாரோ நம்மை மயக்கிவிட்டாற்போல் இருக்கிறது" என்றான்.

தட்டான் பிசகாய் சைரக்கூஸ் ஆந்திபோலிஸினிடத்தில் சங்கிலியைக் கொடுத்துப்போனவுடனே ஒருவருக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்காகப் பிடித்துக்கொள்ளப்பட்டான். தான் சங்கிலி கொடுத்துவந்ததாக எண்ணிய எபிஸஸ் ஆந்திபோலிஸ் அந்த சமயத்திற்குச் சரியாய் அவ்விடத்திற்கு வந்தான். தட்டான் அவனைப் பார்த்தவுடனே, "ஐயா தங்களிடத்தில் இப்பொழுது ஒப்புவித்துவந்த பொன் சங்கிலியின் கிரயம் நான் கொடுக்கவேண்டிய கடனுக்குச் சற்றேறக்குறையச் சரியாயிருக்கும்; ஆகையால் அதைக் கொடுத்தால் என் கடனைத் தீர்த்துவிடுகிறேன்" என்றான். ஆந்திபோலிஸ்



"உன் சங்கிலியைக் கண்டவனார்" என்றான். தட்டான், "நீ சொல்லுகிறது தப்பு, சில நிமிஷங்களுக்கு முன்னே உன்னிடத்தில் நான் அதைக் கொடுத்தேன்" என்று ஒரே பிடிவாதமாய்ச் சொன்னான். இப்படி ஒவ்வொருவனும் தான் சொல்லுகிறதே சரியென்று வெகுகாலம் அவ்விருவரும் வாதித்தார்கள். தட்டான் தன்னிடத்திற் சங்கிலியைக் கொடுக்கவில்லை யென்பது அந்த ஆந்திபோலிஸுக்கு நன்றாய்த் தெரியும். அவனும் அவன் சகோதரனாகிய சைரக்கூஸ் ஆந்திபோலிஸும் உருவத்தில் முழுதும் ஒத்திருந்ததினால் மயங்கி அவன் கையிற்கொடுத்த சங்கிலியை இவனிடத்திலேயே கொடுத்ததாகத் தட்டான் சாதித்தான்.

தட்டானைப் பிடித்துக்கொண்ட உத்தியோகஸ்தன் இந்தப் போராட்டத்தையெல்லாம் கண்டு முடிவில் அவனைக் கடனுக்காகச் சிறையிட்டான். அப்பொழுதே சங்கிலியின் பொருட்டுத் தனக்கு வரவேண்டிய கிரயத்துக்காக அந்த உத்தியோகஸ்தன் ஆந்திபோலிஸை பிடித்துக்கொள்ளும்படி தட்டான் செய்தான். ஆகையால் அவனும் ஆந்திபோலிஸும் ஏககாலத்தில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள்.

ஆந்திபோலிஸ் சிறைச்சாலைக்குப் போகையில் தன் சகோதரன் அடிமையாகிய சைரக்கூஸ் துரோமியோவைக் கண்டு தன் அடிமையென்று பிரமித்து, "அடா என் மனைவியாகிய ஏத்ரியானுவிடம் சென்று என்னை சிறையிலிடும்படி நேரிட்ட சேதிகையை அனுப்பும்படி சொல்" என்றான். துரோமியோ "இது என்ன விபரீதம்! சற்றுநேரத்திற்கு முன் நாம் சாப்பிட்ட விந்தையான வீட்டிற்கு நம்மை எஜமான் மறுபடியும் போகச் சொல்லுகிறாரே! விட்டாற் போதுமென்று இப்பொழுதானே அங்கிருந்து ஓடிவந்தோம்" என்று ஆச்சரியப்பட்டான். ஆந்திபோலிஸின் முகத்தைப் பார்த்து அவனுடன் வேடிக்கையாய் வார்த்தை சொல்வதற்கு அது சமையமல்லவென்று தெரிந்துகொண்டான். ஆகையால் கப்பல் பிரயாணம்போகப் பாய்விரித்துச் சித்தமாயிருந்ததென்னும் செய்தியைச் சொல்லவேண்டுமென்று வந்தவனாகவிருந்தும், அதையும் சொல்லாமல் சும்மாவிருந்தான்.

"மறுபடியும் எத்ரியானாவின் வீட்டிற்குப் போகும்படி நேரிட்டது. அங்கிருக்கும் சமையற்காரியாகிய "தோசைபில்லை" என்பவள் என்னைக் கணவனென்று வலியக் கூப்பிடுகிறாளே; ஆயினும் போய்த்தான் தீரவேண்டும்; எஜமானுடைய சொற்படி அடிமை செய்துதான் தீரவேண்டும்" என்று தனக்குத் தானே வெகு வெறுப்போடு சொல்லிக்கொண்டு போனான்.

எத்ரியானா அந்தத் தொகையை அவனிடம் கொடுத்து அனுப்பினாள். அதை எடுத்துக்கொண்டு வருகையில் சைரக்கூஸ் ஆந்திபோலிஸ் எதிர்ப்பட்டான். அவன் இன்னும் தனக்கு நேரிட்ட ஆச்சரியங்களைக் கண்டு வியந்து ஒன்றும் தோன்றாமல் இருந்தான். அவன் சகோதரன் எபிஸஸ் நகரத்தில் பிரசித்தனானமையால் இவனைக் கண்டவர்களெல்லாம் தாங்களறிந்த அந்த ஆந்திபோலிஸ் என்று நினைத்து வந்தனம் செய்து க்ஷேமலாபங்களை விசாரித்துவந்தார்கள். சிலர் அவனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். சிலர் வீட்டுக்கு வந்து தங்களைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தங்களுக்குச் செய்த உபகாரங்களுக்காக சிலர் வந்தனம் செய்தார்கள். எல்லோரும் அவனை அவன் சகோதரனாக நினைத்துக்கொண்டார்கள். ஓர் தையற்காரன் அவனைப் பார்த்து, "ஐயா இந்தப் பட்டுத்துணிகளைத் தங்களுக்காக வாங்கினேன். தங்களுக்குச் சில சட்டைகள் தைக்க அளவு இப்போதே அவசியம் பிடித்துக்கொண்டு போகவேண்டும்" என்று வற்புறுத்தினான்.

இவையெல்லாம் கண்ட ஆந்திபோலிஸ், "ஆ நான் மந்திரவாதிகளும் சூனியக்காரரும் வாழும் நாட்டில் வந்துவிட்டேன்" என்று நினைத்தான். உடனே துரோமியோ, "ஐயா தங்களைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோன உத்தியோகஸ்தனிடமிருந்து எப்படித் தப்பித்துக்கொண்டு வந்தீர்கள்" என்று கேட்டு, அடிமையைத் தீர்க்க எத்ரியானா அனுப்பிய தங்க நாணயப் பையைக் கொடுத்தான். இதைக் கண்டவுடனே அவனுக்குண்டாயிருந்த திக்பிரமை அதிகரித்தது. தன்னை உத்தியோகஸ்தன் பிடித்துக்கொண்டதையும், சிறைச்சாலையையும், எத்ரியானாவிடமிருந்து கொண்டுவந்த பணத்தையும் பற்றித் துரோமியோ சொன்னதை நினைத்து முற்றும் மனந்



தடுமாறி, "இந்தப் பயல் துரோமியோ சத்தமாய் மதிமயங்கிப் போனான். நாமோ இவ்விடத்தில் மகா மாயையில் அகப்பட்டுத் தடுமாறித் திரிகிறோம்" என்றான். மறுபடியும் தனக்கு நேர்ந்த மயக்கத்தை நினைத்துக்கொண்டு வெகு திகிலடைந்து, "ஆ இந்தக் கோரமான நாட்டிலிருந்து நம்மை எந்தத் தெய்வமாவது அப்புறப்படுத்தி இரட்சிக்கமாட்டாதா!" என்று கதறினான்.

இப்படியிருக்கையில் வேறொரு சீமாட்டி அவனிடம் வந்து, "ஆந்திபோலிஸ்! இன்று நீ என்னுடன் சாப்பிட்டாய் அல்லவா? எனக்கு ஒரு பொன் சங்கிலி கொடுப்பதாகச் சொன்னையே அது எங்கே" என்றாள். இதைக் கேட்டமாத்திரத்தில் ஆந்திபோலிஸுக்குத், தன்னையுமீறிக் கோபமுண்டாய், "போடீ சூனியக்காரி, உனக்குச் சங்கிலி கொடுப்பதாகச் சொன்னவனார்? உன்னுடன் சாப்பிட்டவனார்? இந்த நிமிஷத்திற்குமுன் உன் முகத்தைப் பார்த்தவனார்" என்று கோபமாய்ப் பேசினான். அதற்கு அந்த ஸ்திரீயானவள், "நான் கேட்கமாட்டேன். நீ என்னுடன் சாப்பிட்டாய்; எனக்குச் சங்கிலி கொடுப்பதாய்ச் சொன்னாய்" என்றாள். மறுபடியும் ஆந்திபோலிஸ், "ஒருக்காலும் சொன்னதில்லை" என்றான். அதற்கு அவள், "நல்லது உனக்கு நான் விலையுயர்ந்த மோதிரமொன்று கொடுத்தேனல்லவா? பொன் சங்கிலியைக் கொடாதபட்சத்தில் அந்த மோதிரத்தைக் கொடுத்துவிடு" என்று ஒரே பிடியாய்ச் சொன்னாள். இதைக் கேட்டு ஆந்திபோலிஸ் மறுபடியும், "போடீ சூனியக்காரி, மாயைக்காரி, [illegible] கண்டவனார், உன் [illegible] கண்டவனார்" என்று அவளை விட்டு ஓடிப்போனான். [illegible] பார்சர்களா இவன் பேசின பேச்சையும் முழித்த முழியையும்! இதென்ன காலக்கேடு! இன்றுதானே என்னுடன் வந்து சாப்பிட்டான். இந்தக் கைதானே மோதிரத்தை [illegible] கொடுத்தது. பொன் சங்கிலியைக் கொடுக்கிறேனென்றதும் [illegible]லவோ பயங்கி [illegible] கொடுத்தேன்" என்று மிகவும் ஆச்சரியப்பட்டாள். இவளும் மற்றவர்களைப்போல் அவனை அவன் சகோதரனாகப் பார்த்து இப்படிச் சொன்னாளென்பதை எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. அவள் [illegible]யெல்லாம் விவாகம்

செய்துகொண்டு கிரகஸ்தனாயிருந்த அவன் சகோதரன் செய்ததேயன்றி சைரக்கூஸ் ஆந்திபோலிஸ் செய்ததல்ல.

வீட்டிலிருந்த வேலைக்காரர்கள் தங்கள் எஜமானன் உள்ளே இருந்ததாக நினைத்து, எபிஸஸ் ஆந்திபோலிஸையும் அவன் வேலைக்காரனையும் துரத்திவிட்டபின் அவன் வெகு கோபத்தோடு, "நம்முடைய மனைவிதான் பொறாமையால் இப்படிச் செய்திருக்கவேண்டும். இது அவளுக்கு வழக்கந்தானே. தன்னைவிட்டு அன்னிய ஸ்திரீகளைப் போய்ப் பார்ப்பதாக அவள் அடிக்கடி நம்மேல் வீணாய்ப் பழிபோட்டிருக்கிறாளல்லவா; ஆகட்டும்" என்று சொல்லிக்கொண்டே சைரக்கூஸ் ஆந்திபோலிஸைத் தெருவில் மடக்கிக்கொண்ட ஸ்திரீயின் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குப் போனான். அவள் அவனை வெகு மரியாதையோடு உபசரித்ததினாலும், தன் மனைவி தன்னை வெகு அவமரியாதை செய்து கோபம் மூட்டினதினாலும் தன் மனைவிக்குக் கொடுக்கவேண்டுமென்று எண்ணிய ஓர் பொன் சங்கிலியை முன் சொன்னவளுக்குக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்தான். இந்த சங்கிலிதான் தட்டான் பிசகாய் அவன் சகோதரனிடம் கொடுத்தது. அந்த ஸ்திரீ தனக்குப் பொன் சங்கிலி கிடைக்குமென்னும் மகிழ்ச்சியினால் கிரகஸ்தனாயிருந்த ஆந்திபோலிஸுக்குத் தன் மோதிரத்தைக் கொடுத்தாள். ஆகையால் அவனென்று பிரமித்த அவன் சகோதரன் அப்படி சொன்னதில்லையென்றும், அவளை அறிந்ததில்லையென்றும் சொன்னதைக் கேட்டு அவளுக்குப் பொல்லாத கோபமுண்டாயிற்று. ஆகையால் அவன் புத்தி அவன் சுவாதீனமில்லாமற் போயிற்றென்று நினைத்தவள், அப்பொழுதே ஏத்ரியானாவிடம் சென்று, "உன் கணவன் பயித்தியக்காரனாய்ப் போனான்" என்று தைரியமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தாள். அப்படி சொல்லிக்கொண்டிருக்கையில் தன் கடனைச் செலுத்தப் பணம் வாங்கிக்கொண்டு வரும்பொருட்டு வீட்டுக்குப் போகவேண்டுமென்று சிறைக்காவலனிடம் விடைபெற்று அவனையும் கூடவே இட்டுக்கொண்டு அவள் புருஷனாகிய ஆந்திபோலிஸ் வந்தான். அவனிடம் கொடுக்கும்படி துரோமியோவின் வசம் ஏத்ரியானா அனுப்பிய பணம் மற்றொரு ஆந்திபோலிஸிடம் கொடுக்கப்பட்டதல்லவா?



எபிஸஸ் ஆந்திபோலிஸ் தன் மனைவியைக் கண்டவுடன், "முன், நான் வீட்டுக்கு வந்தபோது உள்ளே விடாமல் ஏன் அப்புறம் போகச்சொன்னாய்?" என்று நிந்தனையாய்க் கேட்டான். இதைக் கேட்டவுடனே ஏத்ரியானா, "இதென்ன விபரீதம்! இன்று போஜன சமயத்தில் நான் உன் கணவனல்ல; இதற்குமுன் நான் எபிஸஸ் நகரத்திற்கு வந்ததே கிடையாது என்று ஒரே சாதனையாய்ச் சாதித்தார். இப்பொழுதோ இப்படிச் சொல்லுகிறார். இவருக்குப் பயித்தியம் பிடித்ததென்பதற்குக் கேட்கவேண்டுமா" என்று தனக்குள் நிச்சயித்துக்கொண்டாள். ஆகையால் சிறைக்காவலனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டுத் தன் வேலைக்காரரைக் கூப்பிட்டுத் தன் கணவனைக் கயிற்றினால் கட்டி ஓர் இருண்ட அறைக்குட் சேர்த்து அவன் பயித்தியத்தை நீக்கும்பொருட்டு ஓர் வைத்தியனை இட்டுக்கொண்டு வரும்படி அனுப்பினாள். இதெல்லாம் பார்த்து, தன் சகோதரனுடன் உருவத்தில் ஒத்து இருந்ததினால் தனக்கு நேரிட்ட இந்த அபவாதத்தைப்பற்றி வெகு கோபத்துடன் சீறிக்கொண்டிருந்தான். இவன் கோபத்தைப் பார்க்கையில் இவன் பயித்தியக்காரனென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லையென்று மேன்மேலும் உறுதி யுண்டாயிற்று. துரோமியோவும் அதே கதையைப் பிடிவாதமாகச் சொல்லிக்கொண்டுவந்ததினால் அவனையும் பிணைத்து அவன் எஜமானனுடன் கொண்டுபோனார்கள்.

ஏத்ரியானா தன் கணவனை அறைக்குள் போட்டு அடைத்தவுடனே ஒரு வேலைக்காரன் ஓடிவந்து, "அம்மம்மா! ஆந்திபோலிஸும் துரோமியோவும் நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே எப்படியோ விடுவித்துக்கொண்டு ஓடிப்போயிருக்கவேண்டும். ஏனென்றால், பக்கத்துத் தெருவில் அவ்விருவரும் யதேச்சையாய்ப் போய்க்கொண்டிருக்கிறார்கள்" என்றான். ஏத்ரியானா இதைக் கேட்டவுடனே தன் கணவனைப் பிடிக்கும்பொருட்டுச் சிலரை இட்டுக்கொண்டு அவனை வீட்டுக்குக் கொண்டுவர ஓடினாள். அவள் சகோதரியும் அவளுடன் போனாள். அண்டையிலிருந்த ஓர் மடத்தின் வாயிலில் வந்தபொழுது ஆந்திபோலிஸும் துரோமியோவும் தென்பட்டாற்போல் நினைத்தார்கள். இப்படி மறு

படியும் இவ்விரட்டைப்பிள்ளைகளின் ஒற்றுமையினால் மோசம் போனார்கள்.

இந்த ஒற்றுமையினால் நேரிட்ட மாறாட்டங்கள் சைரக்கூஸ் ஆந்திபோலினை இன்னும் விடவில்லை. தட்டான் கொடுத்த பொன்சங்கிலி அவன் கழுத்திலிருந்தது. அதைத் தான் பெற்றுக்கொள்ளவில்லையென்றும், தனக்குத் தட்டானே தானாய்க் காசின்றி அதைக் கொடுத்தானென்றும், அப்புறம் அந்தத் தட்டானைத் தான் பார்த்ததில்லையென்றும், அதற்குப் பணம் கொடுக்கப் போவதில்லையென்றும், ஆந்திபோலிஸ் சொன்னதினால், தட்டான் அவனை நிந்தித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது எத்ரியானா அவனிடம் வந்து, "காவற்காரரிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு வந்துவிட்ட என் கணவன் இவன்தான்" என்றாள். அவளுடன் வந்த மனிதர்கள் ஆந்திபோலிஸ் துரோமியோ இவர்களைப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொள்ளப் போனார்கள்; அதனால் அவ்விருவரும் அம்மடத்துக்குள் ஓடினார்கள். ஆந்திபோலிஸ் அம்மடத்தம்மையைப் பார்த்து தன்னை அவ்விடத்திலேயே வைத்துக்கொண்டிருக்கும்படி கேட்டுக்கொண்டான்.

அப்பொழுது அந்தக் கூச்சலுக்குக் காரணமென்னவென்று கேட்க, அம்மடத்தம்மை வெளியில் வந்தாள். அவளைப்பார்த்தால் வெகு கம்பீரமும் மகிமையும் உள்ளவளாயும், தான் பார்த்தவிஷயங்களின் குணதோஷங்களை அறியத்தக்க விவேகமுள்ளவளாயும் இருந்தாள். தன் வீட்டில் அடைக்கலம் புகுந்த அவ்விருவரையும் எளிதில் வெளிப்படுத்துவதில்லையென்று சொன்னாள். எத்ரியானா, தன் கணவன் பைத்தியத்தைப்பற்றிச் சொன்ன கதையை நுட்பமாய் விசாரித்தாள். "உன் கணவனுக்கு இப்படிக்கு அகஸ்மாத்தாகச் சித்தப்பிரமை யுண்டானதற்குக் காரணமென்ன? கடலில் கப்பலின் மீது போயிருந்த அவன் சம்பத்து நஷ்டமாய்விட்டதா? அல்லது பிரியமான சிநேகிதன் ஒருவன் இறந்து அவன் மனதுக்குக் கிலேசமுண்டாயிற்றா?" என்று வினவினாள். அதற்கு எத்ரியானா, "அப்படியொன்றும் நேரிடவில்லை" என்றாள். அதற்கு மடத்தம்மை, "ஒருவேளை அவன் மனைவியாகிய



உன்னைவிட்டு வேறொரு பெண்ணினிடத்தில் அன்பைச் செலுத்தியிருக்கலாம். அதனால் அவனுக்கு இப்படி விகாரம் நேரிட்டது" என்றாள். அதற்கு எத்ரியானா, "அம்மா என் கணவன் அடிக்கடி வீட்டுக்கு வராமல் நின்றுபோய்விடுவார்; இதற்குக் காரணம் வேறொரு பெண்ணினிடத்தில் அன்பு வைத்திருக்கவேண்டுமென்று வெகுகாலமாய் எண்ணியிருந்தேன்; அது உண்மையாகவே முடிந்தது" என்றாள். எபிஸஸ் ஆந்திபோலிஸ் வீட்டைவிட்டு பலமுறை போய்விட்டது வேறொரு பெண்ணினிடத்தில் பிரியங்கொண்டதினாலல்ல. அவன் மனைவி அடிக்கடி அவனைக் கட்டுப்படுத்தி பொறாமைகொண்டு தொந்தரவு செய்துவந்ததினால் அப்படி வெளியே போய்க்கொண்டிருந்தான். இப்படியே யிருக்கலாமென்று, எத்ரியானா பேசும் வார்த்தைகளின் உக்கிரத்தினால் மடத்தம்மை சந்தேகப்பட்டு, உண்மையைத் தெரிந்துகொள்ள அவளைப் பார்த்து, "அம்மா அப்படியானால் நீ உன் கணவனைக் கண்டித்துப் புத்திசொல்லி யிருக்கவேண்டும்" என்றாள். அதற்கு எத்ரியானா, "அப்படியே செய்துதானிருக்கிறேன்" என்றாள். அதற்கு மடத்தம்மை, "நல்லது நீ சொன்னது போதாமல் இருக்கலாம்" என்றாள். எத்ரியானா, இந்த விஷயத்தைப்பற்றி ஆந்திபோலிஸுக்குத் தான் சொன்னது போதுமானதென்று ரூபிக்க, "அம்மா எங்களுக்கு எப்போ பார்த்தாலும் அதுதான் பேச்சு. படுக்கையில் இந்தப் பேச்சைப் பேசிக்கொண்டே அவனைத் தூங்கவிடமாட்டேன். சாப்பிடும்பொழுதும் இந்தப் பேச்சைப் பேசிக்கொண்டு அவனைச் சாப்பிட விடமாட்டேன். அவனோடு தனியாயிருக்கையில் வேறொன்றைப்பற்றியும் நான் பேசினதில்லை. யாராவது நாலுபேர் வந்திருந்தால் அப்பொழுது இவ்விஷயத்தைப்பற்றி அடிக்கடி சைகை செய்து வருவேன். இப்படியெல்லாம் நான் சொல்லியும் அந்தப் பாவியின் மனம் சற்றேனும் இரங்காமல் என்னைக்காட்டிலும் விசேஷமென்று நினைத்து வேறொரு பெண்ணினிடத்தில் சென்றது" என்றாள்.

அம்மடத்தம்மை இவ்வாறு பொறாமையுள்ள எத்ரியானாவின் வாயினாலேயே அவள் தன் கணவனுக்கு உண்-

ப[illegible]ணின கஷ்டங்களை முற்றுந் தெரிந்துகொண்டாள். அப்புறம் அவளைப்பார்த்து "ஆகையினால்தான் உன் கணவனுக்குப் பயித்தியம் பிடித்தது. வெறிபிடித்த நாயின் விஷப் பல்லைக்காட்டிலும் பொறாமையுள்ள பெண்ணின் போராட்டம் கொடியதல்லவா? நீ ஓயாமல் அவனைத் திட்டிக்கொண்டு வந்ததினால் அவனுக்குத் தூக்கம் பிடியாமற் போயிற்று. அதினால் அவனுக்குச் சித்தப்பிரமை உண்டாயிருப்பது ஆச்சரியமா? அவன் சாப்பாட்டில் குழம்புக்குப் பதிலாய் உன் கொடிய திட்டுகளையே விட்டுக்கொண்டு வந்தாய்; சங்கடத்துடன் [illegible] சரியாய் ஜீரணமாகிறதில்லை; அதினால் இப்பொழுது அவனுக்குச் சுரம் வந்திருக்கிறது. உன் போராட்டத்தினால் அவன் வேடிக்கை விளையாட்டுகளையெல்லாம் விட்டுவிட்டானென்றாய். நாலுபேர் சிநேகிதர்களோடே சேர்ந்து உல்லாசமாய் இராமற்போனால் எப்பேர்க்கொத்தவனும் ஒன்றுந்தோன்றாமல் எக்கம் பிடித்து வெகு கிலேசத்தை அடையமாட்டனா? ஆகையினால் உன்னுடைய பொறாமையான சேஷ்டைகளே உன் கணவனுக்குப் பயித்தியத்தை உண்டுபண்ணின" என்றாள்.

தன் சகோதரி, கணவனை நல்ல வார்த்தைகளினாலேயே சாந்தமாய்க் கண்டித்துக் கொண்டுவந்தாள் என்று அவள் [illegible]சமாய் மடத்தம்மைக்கு ஊஸியானு சொல்லப்போனாள். மறுபடியும் தன் சகோதரியைப் பார்த்து "அம்மா ஏத்ரியானு, மடத்தம்மை உன்னை இப்படி நிந்தித்துக்கொண்டிருக்கையில் நீயேன் பதில் சொல்லாமல் இருக்கிறாய்" என்றாள். மடத்தம்மை ஏத்ரியானுவிடம் உள்ள தப்பை [illegible]டமாய் எடுத்துக் காட்டினதினால், ஏத்ரியானு வேறொன்றுஞ் சொல்லத் தோன்றாமல் "என் தப்பை நானே வெளிப்படுத்தி இவ்வாறு நிந்தனைக்குப் பாத்திரமாயினேன்" என்றாள்.

தன் நடக்கையினால் நானே வெட்கமடைந்த ஏத்ரியானு தன் கணவனைத் தன்னிடம் ஒப்புவிக்கும்படி மடத்தம்மையை உருக்கிக் கேட்டாள்; அதற்கு மடத்தம்மை "என் விட்டுக்குள் ஒருவரும் அடியெடுத்து வைக்கக்கூடாது. வெகு பொறுமையுள்ள பத்தினியாகிய உன்னிடத்தில் அநியாயமாய் வெகு கஷ்டங்களை அனுபவித்த இம்மனிதனை ஒப்பு



[illegible]

இப்படி அங்கு வந்ததைப் பார்த்து ஏத்ரியாள் வெகு ஆச்சரியப்பட்டாள்.

ஈஜியன் மகனைப் பார்த்தவுடனே, "தாயையும் சகோதரனையும் தேடுவதற்கு நம்மை விட்டுப்போன பிள்ளை இவன்தான்; இப்பிரியமுள்ள பிள்ளை தடையின்றி நம்முடைய அபராதத்தைக் கட்டி நம்மை மீட்பான்" என்று நிச்சயித்தான்; ஆகையால் அவன் ஆந்திபோலிஸைப் பார்த்துத் தந்தைக்குரிய அன்புடன் பல வார்த்தைகளைச் சொல்லி அந்த க்ஷணமே தான் மீட்கப்படுவதாக வெகு சந்தோஷத்துடன் எண்ணமிட்டான். அந்த ஆந்திபோலிஸ் ஈஜியனைத் தனக்கு முற்றும் தெரியாதென்று சொல்ல, அவனுக்கு வெகு ஆச்சரியமுண்டாயிற்று; இது சகஜந்தானே? பச்சைக் குழந்தையாயிருக்கையில் காற்றுமழையிற் பிரிக்கப்பட்டபின் இந்த ஆந்திபோலிஸ் தன் தகப்பனைப் பார்த்ததே கிடையாது. வெகு சனதிசையிலிருந்த ஈஜியன் தன்னைத் தன் மகன் இன்னானென்று தெரிந்துகொள்ளும்பொருட்டுப் பல வார்த்தைகளைச் சொன்னான். "நமக்கு நேரிட்ட தொல்லைகளும் துக்கங்களும் நமது உருவத்தை முற்றும் மாற்றிவிட்டதினால், நம்முடைய பிள்ளைக்கு நாம் தெரியாதவனாகிவிட்டோம்; அல்லது இப்பேர்ப்பெற்ற கஷ்டதிசையில் இருப்பதினால் தந்தையென்று சொல்லுவதற்கு நம்முடைய பிள்ளை சங்கோசப்பட்டிருக்கிறானோ" என்று நினைத்தான். இப்படி அவன் மனந்தடுமாறி நிற்கையில், மடத்தம்மையும், மற்றொரு ஆந்திபோலிஸும் துரோமியோவும் வெளியே வந்தார்கள். அப்பொழுது இரண்டு கணவர்களும் இரண்டு துரோமியோக்களும் தன்முன் நிற்பதைக் கண்டு ஏத்ரியாள் வெகு ஆச்சரியப்பட்டாள்.

அதுவரையில் அவர்கள் எல்லோருக்கும் கலக்கத்தை உண்டுபண்ணின கெட்ட மதிமயக்கங்களெல்லாம் அப்பொழுதுதான் வெளியாயின. ஒருவருக்கொருவர் சற்றேனும் வித்தியாசமில்லாத அவ்விரண்டு ஆந்திபோலிஸ்களையும் இரண்டு துரோமியோக்களையும் அரசன் பார்த்தவுடனே, அன்று காலையில் ஈஜியன் தன்னுடன் சொன்ன கதையை ஞாபகம் செய்துகொண்டான். பார்ப்பதற்குப் பரம இரகசியமாயிருந்த அக்குழப்பத்தின் தன்மை இன்னதென்று தெரிந்துகொண்டான். அந்நால்வரும் ஈஜியனுடைய இரண்டு பிள்ளைகளும் அவர்களின் வேலைக்காரர்களாகிய இரட்டைப் பிள்ளைகளுமாக இருக்கவேண்டுமென்றான்.



இதெல்லாம் இப்படியிருக்க, எதிர்பாராத வேறொரு சந்தோஷமுண்டாயிற்று. அதனால் ஈஜியனுடைய சரித்திரம் சகமாய் முடிந்தது. அன்று காலை அவன் மரணதண்டனைக்கு ஆளாய் வெகு விசனத்தோடு சொன்ன கதையானது சூரியன் அஸ்தமனமாவதற்கு முன் வெகு ஆனந்தமாய் முடிந்தது. அதாவது, கௌரவமுள்ள அம்மடத்தம்மை தான் வெகுகாலமாய்க் காணாமற்போன ஈஜியன் மனைவியென்றும், அவ்விரண்டு ஆந்திபோலிஸ்களுடைய தாய் என்றும் வெளியிட்டாள்.

நாம் முன் சொன்னபடி செம்படவர் பெரிய ஆந்திபோலிஸையும் துரோமியோவையும் தன்னிடமிருந்து கொண்டுபோனபிறகு, அந்த அம்மாள் ஓர் பெண்மடத்தைச் சேர்ந்தாள். அங்கே வெகு விவேகத்தோடும் நன்னடக்கையோடும் இருந்ததினால் கடைசியில் அம்மடத்திற்கே தலைவியாக நியமிக்கப்பட்டாள். "யாரோ ஒருவன் கஷ்டப்பட்டு நம்மிடத்தில் அடைக்கலம் புகுந்தான். அவனை ஆதரிப்பது நமது கடமை" என்று தனக்குத் தெரியாமலே தன் மகனாகிய ஆந்திபோலிஸை இரட்சித்தாள்.

நெடுங்காலம் பிரிந்திருந்த தாய் தந்தையரும் அவர்கள் பிள்ளைகளும் இவ்வாறு ஒன்று சேர்ந்ததினால், வெகு சந்தோஷத்தோடும் அன்போடும் ஒருவரையொருவர் உபசரித்துக் கொண்டாடினார்கள். அக்கொண்டாட்டத்தில் ஈஜியன் இன்னும் மரணதண்டனைக்கு உட்பட்டிருந்தானென்பதைச் சற்று மறந்திருந்தனர். பரவசம் தெளிந்து சற்று ஞாபகம் வந்தவுடனே எபீஸஸ் ஆந்திபோலிஸ் அபராதத்தைச் செலுத்தித் தன் தகப்பனை மீட்பதாக அரசனுடன் சொன்னான்; அரசன் அபராதத்தைப் பெற்றுக்கொள்ளுவதில்லையென்று ஈஜியனை முற்றும் மன்னித்தான். அக்குடும்பத்தார் வெகுகாலம் அநுபவித்த கஷ்டங்களெல்லாம் இப்படிச் சுகமாய் முடிந்தன. "இதைப்பற்றிச் சாவகாசமாய் இவர்கள் சந்தோஷ வார்த்தைகளைப் பேசிக்கொள்வார்கள். அவற்றை நாமும் கேட்

போம்" என்று அம்மடத்தம்மையுடனும், மறுபடியும் கண்டு பிடிக்கப்பட்ட தம் மனைவியுடனும், பிள்ளைகளுடனும் அரசனும் அம்மடத்துக்குட் சென்றான். வேலைக்காரப் பயல்களாகிய இரண்டு துரோமியோக்களும் தங்கள் தாழ்ந்த நிலைமைக்குத் தக்கபடி மகிழ்ந்ததை நாம் சொல்லாமல் விட்டு விடக்கூடாது. அவர்கள் ஒருவரையொருவர் வெகுசாய் உபசரித்து, சந்தோஷங் கொண்டாடினார்கள். "சகோதரனே, நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்; கண்ணாடியில் என் உருவத்தை எப்படிப் பார்ப்பேனோ அப்படியே உன் இனிய உருவத்தைப் பார்க்கிறேன்" என்று பரஸ்பரம் மெச்சிக்கொண்டார்கள்.

அத்ரியானா தன் மாமியார் சொன்ன புத்திமதியினால் வெகு குணவதியாய்க் கணவனிடத்தில் காரணமில்லாத சந்தேகங்களையும் வீணாய்ப் பொறாமைகொள்வதையும் விட்டுவிட்டாள்.

சைரக்கூஸ் ஆந்திபோலிஸ், மைத்துனி சகோதரியாகிய அழகிய லூசியானாவை விவாகஞ் செய்துகொண்டான். சாதுவாயும் வயதுசென்றவனாயுமிருந்த ஈஜியன் மனைவிமக்களுடன் வெகு வருஷகாலம் எபிஸஸ் நகரத்தில் இருந்தான். இவ்விரட்டைப் பிள்ளைகளின் உருவத்தின் ஒற்றுமையினால் நேரிட்ட மாறுபாட்டங்கள் அந்தத் தினத்தோடு தெளிந்து நீங்கிப்போனதாக நாம் நினைக்கக்கூடாது. அப்புறமும் ஒவ்வொருவேளை நகைக்கத்தக்க பல பிழைகள் நேரிட்டன. ஒரு ஆந்திபோலிஸும் துரோமியோவும் மற்றொரு ஆந்திபோலிஸ் துரோமியோவாக [illegible]ப்பட்டனர். அப்பொழுது முன் சொன்ன தினத்தில் நடந்த விநோதங்கள் ஞாபகத்துக்கு வந்து வெகு வேடிக்கையான நகைப்பிழை நாடகமாக முடியும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1908.